கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் விவசாய விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—31.1.1970.
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 5.2.1970.

**குறிப்புகள்**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்ல வா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப் பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங் களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவல கத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்:** இலங்கை அரசாங் கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப் பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப் படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**

இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூபா 6,720—12 × 360—ரூபா 11,040 வருடாந்தம்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் பலாலி, குளியாப்பிட்டியா, கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள்.**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித் துடையனவையுமாகும்.

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 31.1.1970 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் விவசாய எந்திர வியலில் வழங்கப்படும் ஒரு பட்டம்; அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் விவசாயத்தில் வழங்கப்படும் ஒரு பட்டம் பெற்றிருப்பதுடன்

(ii) பல்கலைக் கழகங்களில் கற்பிப்பதில் 3 வருட அனுபவம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளில் அல்லது ஆசிரியர் கலாசாலைகளில் அல்லது உயர்தரக் கல்வி மட்டத்தில் அல்லது இவை எல்லாவற்றிலும் கற்பிப்பதில் 6 வருட அனுபவம்; அல்லது பண்ணைப் பொறித் தொகுதி வேலையில் அல்லது ஆராய்ச்சி வேலையில் அல்லது விவசாயத்தில் பூரண வேலையில் 2 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியி லுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக் குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத் தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமை யை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும்; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்ட னுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள் எந்த உத்தியோகத் தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 26 ந் உ.

1-103/7—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

இல. A. 101/X2184/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : பிரதம வித்தியாதிகாரி (சேவையிலுள்ளவர்க்கான பயிற்சி, ஆரம்பக் கல்வி)**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள பிரதம வித்தியாதிகாரி (சேவையிலுள்ளவர்க்கான பயிற்சி, ஆரம்பக் கல்வி) பதவிக்கு விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.1.31.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.2.5.

**குறிப்புகள்**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்ல வரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப் பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத் திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங் களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக் குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத் தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப் பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப் படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தர மானதும் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம், காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 11,040—11 × 480—ரூபா 16,320 வருடாந்தம்.

ரூபா 14,880 க்கு முன் வினைத்திறமைகாண் தடை உண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.1.31. ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டதாரிகளாக வேனும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளாகவேனும் இருக்க வேண்டும்.

(ஈ) ஆட்சேர்ப்பு மொழிக்கமைய சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்தர பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(உ) கல்வி ஆலோசகராக 3 வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது 1 ஆந் தர அதிபராக அல்லது கனிட்ட தொழில்நுட்பப் பாடசாலை அதிபராக அல்லது ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக அல்லது 1 ஆந் தர விசேட பதவி வகிப்பவராக அல்லது சமனான வேறு யாதேனும் பதவி வகிப்பவராக 5 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

**குறிப்பு**

(i) கல்விச் சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் கற்பித்தல் சேவையில் அல்லது இச்சேவைகளில் மொத்தமாக 10 வருடத்துக் குக் குறையாத சேவை புரிந்திருப்பவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

(ii) 15 வருட சேவை புரிந்துள்ளவர்களும் சகல வினைத்திறமைகாண் பரீட்சைகளில் சித்தி அடைந்துள்ளவர்களும் பயிற்றப்பட்ட பட்ட தாரித் தகைமைகளுடன் வட்டார வித்தியாதிகாரியாக 10 வருட சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டப்பின் பட்டம் பெற்ற வட்டார வித்தியாதி காரியாக 7 வருட சேவை புரிந்துள்ளவர்களுமான வட்டார வித்தியாதிகாரிகளும் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித் துடையராவர்.

(iii) கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :—

(அ) கல்வி உளவியல், கல்வி அளவீடுகள் ஆகியவற்றில் பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்களுக்கும் திட்டங்கள் வகுத்தற்கு வேண்டிய மட்டத்தில் அப்பாடங்களில் ஆழ்ந்த அறிவு பெற்றுள்ளவர்களுக்கும்;

(ஆ) கல்வி அபிவிருத்தி வேலையில் ஊக்கத்துடன் பங்கு பற்றிய தெனச் சான்று சமர்ப்பிக்கக்கூடியவர்களுக்கு, விண்ணப்ப தாரிகள் இயலுமானவிடத்து, இவை சம்பந்தமான வெளியீடு களையும் ஏனைய பொருட்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்:

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமை யை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப் பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறு விடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 26 ந உ.

1-103/8—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887.

---

No. A/88 X 2185/69.

## தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

### புள்ளிவிபர வல்லாளர் பதவி

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர வல்லுனர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களிலான விண்ணப்பங்கள் பின்வரும் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1, எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1970.1.31.

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள் : 1970.2.5.

**குறிப்பு : (I)** அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் சொந்த முகவரியிட்ட 9"×4" அளவிற்குக் குறையாத " முத்திரையிடாத " கடிதவுறையொன்றை அனுப்புவதோடு விண்ணப்பக்காரராக விரும்புபவர் அரசாங்க சேவையிலுள்ளவரா, அல்லா தவரா என்பதையும் மிகத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(II) விண்ணப்பப்படிவம் அல்லது அப்படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப் புவதற்குக் கடைசித்தினம் வரையும் தாமதிப்போர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(III) வெளியூர் விண்ணப்பக்காரர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங் களை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பின் விண்ணப்பப்படிவங்களை விதித்த கால எல்லைக்குள் தாம்வதியும் நாட்டுக்குரிய அல்லது அதற்கு மிகக் கிட்டிய நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பி இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்புமாறு செய்விக்கலாம்.

**(IV) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங் கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்த வெளிநாட் டிலுள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்கேற்ற உடல் நல முடையவர்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பயிற்சியாளரிடம் மருத்துவச்சோதனை பெறுவதற்குச் சமூக மளிக்க வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத் தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் அவ் வுத்தியோகத்தர்களே கொடுக்கவேண்டும்.

**2 தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தர மானதும் உபகாரச்சம்பளமுடையதுமாகும். ஆண் அபேட்சகர்கள் நிய மிக்கப்படும் திகதியிலிருந்து மூவாண்டுகாலம் தகுதிகாண்நிலையில் நிய மிக்கப்படுவர். பெண் அபேட்சகர்கள் முதலில் சகாயநிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு நியமனத் திகதியிலிருந்து மூவாண்டு காலம் பரீட்சை நிலையி லிருப்பர். இவர்கள் பத்தாண்டுகாலச் சேவைமுடிவடையுமுன் எக் காலத்திலாவது உபகாரச்சம்பள முறையில் சேர்ந்து கொள்ளும் உரிமை யுடையவராவர். ஒரு முறை அவ்விருப்புரிமையைப் பிரயோகித்துக் கொண்டபின்னர் அதை நிராகரிக்கவியலாது.

அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச்சம்பளமுடையதுமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் நியமனத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதிலாகக் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

**3 சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திர்ட்டிய சம்பள அளவுத் திட்டம்—6,720 ரூபாவில் ஆரம்பித்து வருடமொன்றுக்கு 360 ரூபா வீதம் 12 வருடாந்த சம்பள ஏற்றங்களையும் 480 ரூபா வீதம் 11 வருடாந்த சம்பள ஏற்றங்களையும் பெற்று உயர்வடைந்து 16,320 ரூபாவை அடையும். வருடத்திற்கு 11,520 ரூபாவையும் 14,880 ரூபா வையும் அடையுமுன்னர் வினைத்திறமைகாண் தடைகள் இடம்பெறும்.

**4 தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின் வரும் தகைமைகளுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றுகளைக் காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.1.31 திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை இத்திணைக்களத்தில் உள்ள வர்களுக்கு அமையாது)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் பின்வரும் பாடங்களொன் றில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டமோ அல்லது உயர்தரப்பட்டதாரிப்பட்டமோ பெற்றிருக்க வேண்டும்:— புள்ளிவிபரவியல், கணிதம், பொருளியல், குடி நிலைப்புள்ளிவிபரவியல், சமூகவியல், மானிடரியல்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். **(முக்கிய குறிப்பு)** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலை களுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது ;

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத் தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :** (1) ாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயி னும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல் லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச் சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் ( I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க).

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல்வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500, காலிமுகச்செயலகம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 26 ந் உ.

1—103/9—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

இல : AB. 97/X2186/69

## பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### உதவிப் புவிப்பரப்பியலாளர் அல்லது பயிற்சிபெறும் உதவிப் புவிப் பரப்பியலாளர் பதவிகள்

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள உதவிப் புவிப்பரப்பியலாளர் அல்லது பயிற்சிபெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இக்கந்தோரால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் எழுதப்பெற்று, "செயலாளர்", அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1970.1.31.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.2.5.

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9″ × 4″ அளவுக்குக் குறையாததும், முத்திரை இடப்படாததுமான ஒருகடித உறையைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக இருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா, அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித்திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனுல் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கசேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

### உதவிப் புவிப்பரப்பியலாளர்

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்:**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டதுமாகும். இந் நியமனம் முதல் 3 வருட காலமும் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—வருடம் ரூபா 6,720 ல் ஆரம்பமாகி ரூபா 360 க் கொண்ட 12 வருட உயர்வுகளாலும், வருடம் ரூபா 480 க் கொண்ட 11 வருட உயர்வுகளாலும் ரூபா 16,320 வரை உயர்வதுடன் வருடாந்தச் சம்பளம் ரூபா 11,520 க்கு முன்னும் ரூபா 14,880/– க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் வருடச் சம்பளம் 11,520 க்கு மேலாகுமுன் அங்கீகரிக்கப்பட்ட புவிவரலாற்றியல் துறையில் பட்ட மேற்படிப்புப் பட்டமோ, அல்லது அதற்குச் சமமான பட்டமோ பெறவேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீடு ஒன்றில் தனது சொந்த வேலை சம்பந்தமான விஞ்ஞான ஈடுபாடு பற்றிப் பிரசுரிக்கப்படவேண்டும். அப்படிப் பிரசுரிக்கப்பட்ட வேலையை வருடம் ரூபா 11,520 ல் உள்ள வினைத்திறமைகாண் தடையின் உயர்வுக்காக அரசாங்கசேவை அதிகாரசபையால நியமிக்கப்படும் குழுவால் மதிப்பிடப்படும். அபேட்சகர் பட்ட மேற்படிப்புப் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமமாகவோ இருந்தால் அல்லது தேர்வு செய்யப்படும் நேரத்தில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான வெளியீட்டில் தனது வேலையைப் பிரசுரித்திருந்தால், அரசாங்க சேவை அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் பிரசுரிக்கப்பட்ட வேலையை மதிப்பீடு செய்தபின்னர் வருடம் ரூபா 7,800 ஐ ஆரம்பப்படியாக வழங்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியாகவோ அல்லது பதிவினுலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) 1970.1.31 ல் 22 வயதுக்கு உட்படாமலும் 30 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக் கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்)

(ஈ) அங்கீகாரம் பெற்ற ஓர் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப் பரீட்சையில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (விசேடமாக) புவிவரலாற்றியலில் சிறப்புப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

### பயிற்சி பெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர்

5. **தகமைகளும், நியமன நியதிகளும், படிகளும், சேவை நிபந்தனைகளும்.**—(i) 4 ம் பந்தியில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ள அபேட்சகர்கள் உதவிப் புவிப்பரப்பியலாளர்களாக நியமிக்க தோற்றுவிடின் கீழ்க்காணும் தகைமைகளையுடைய அபேட்சகர்களைப் பயிற்சி பெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர்களாக தெரிவு செய்ய ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்படித் தெரிவு செய்யப்படுவோர் உதவிப் புவிப்பரப்பியலாளர் பதவிக்கு நியமிக்கப்படமுன் விஞ்ஞானப்பட்டதாரிப்பட்டம் (விசேடமாக) புவிவரலாற்றியல் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டம் பெறவேண்டும்.

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பட்டதாரி (பொது) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். பாடங்களில் புவிவரலாற்றியல் ஒரு பாடமாகக் கொண்டு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

**குறிப்பு.**—கடைசியாக நடாத்தப்பெற்ற விஞ்ஞான பட்டதாரி (பொது) பட்டப் பரீட்சையில் புவிவரலாற்றியலை ஒரு பாடமாக எடுத்து முடிவை எதிர்பார்க்கும் அபேட்சகர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பெறுபேறு வெளிவந்த திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் தாம் சித்தியடைந்தவரா இல்லையா என்பதை எனக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) பயிற்சி பெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர்கள் நியமனம் செய்வதற்குப் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் பின்வரும் கல்வித் தராதரங்களையுடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் பரிசிலனைக்குத் தகுதியுடையனவாகும்.

(i) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரம்) பத்திரப் பரீட்சையில் 3 விஞ்ஞானபாடங்களுடன் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரம்) பத்திரப் பரீட்சையில் புவிவரலாற்றியல் பாடத்துடன் பின்வருவன ஒன்றும்—இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல் அல்லது விலங்கியல்.

**குறிப்பு.**—புவிவரலாற்றியல் உட்பட இரண்டு விஞ்ஞான பாடங்கள் உள்ள அபேட்சகர்கள் புவிவரலாற்றியலில் விஞ்ஞான பட்டதாரி (விசேட) பட்டம் பெறுவதற்கான புகுமுகப் பரீட்சைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யப்பட்டதென அத்தாட்சி காண்பிக்கப்படவேண்டும்.

(இ) 1970.1.31 ல் வயது 19 க்கு உட்படாமலும் 26 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக் கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்.

(ii) விஞ்ஞான பட்டதாரிப் (பொது) பட்டத்துடன் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டோருக்கு பயிற்சியில் இருக்கும் காலத்தில் வருடம் ஒன்றுக்கு நிலையான திரட்டிய சம்பளம் ரூ. 6,456 ம் விவாகமாகியிருந்தால் விவாகப்படியும் வழங்கப்படும். பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலிருந்து பயிற்சிபெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் பயிற்சிக் காலங்களில் தங்களது முந்திய பதவியின் சம்பள அளவுத் திட்டத்திலேயே தொடர்ந்தும் சம்பளம் பெறுவர். பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும் அதாவது புவிவரலாற்றியலில் விஞ்ஞான பட்டதாரி (விசேட) பட்டம் பெற்று உதவிப் புவிப்பரப்பியலாளர்களாக நியமிக்கப்பட்டதும், அவர்கள் 3 ம் பந்தியில் குறிப்பிட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிமையுடையோராவர்.

(iii) பயிற்சிபெறும் உதவிப் புவிப்பரப்பியலாளர்கள் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் ஆரம்பப்பயிற்சி நெறியில் ஈடுபடுத்தப்படுவர். அவர்களது வேலையும் நடத்தையும் திருப்திகரமாகக் காணப்பட்டால் புவிவரலாற்றியலில் பயிற்சி பெறுவதற்காக ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படுவர். ஒரு பயிற்சியாளரது வேலையும், நடத்தையும் பயிற்சிக்காலத்தில் திருப்திகரமற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவருக்கென ஒழுங்கு செய்யப்பட்ட ஆரம்ப பயிற்சி நெறியில் பயிலமறுத்தால் அவர் முன் அறிவித்தல் எதுவுமின்றி நீக்கப்படுவர். அத்துடன் திணைக்களத்தில் அவரது பயிற்சிக்கென செலவிடப்பட்ட முழுத் தொகையும் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுவர்.

(iv) தெரிவு செய்யப்பட்டவர் நியமனத்திற்கு முன்போ அல்லது பின்போ பயிற்சி நெறியைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு அனுப்ப நேரிடலாம். பயிற்சி நெறிக்காலத்தில் அந்நேர ஏற்பாட்டிற்கிணங்க படிகள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் வெளிநாட்டுக்குப் பயிற்சி பெற அனுப்பப்பட்டால் அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கையும் அல்லது பொருத்தமும் செய்யப்பட வேண்டியவராவார். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதோர் இரு பிணை நிற்போருடன் உடன்படிக்கை செய்ய கேட்கப்படுவர்) அத்துடன் பின்வருவனவற்றையும் மேற்கொள்ளப்படுவராவர்.

(அ) அவர் ஊக்கமாகவும் விசுவாசமாகவும் தனக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியை பின் பற்றுவதாகவும் அது முடிவடைந்த காலத்தில் இலங்கைக்குத் திரும்பிக் குறிப்பிட்ட காலத்துக்கு அரசாங்கத்திற்கு கடமையாற்றுவதாயும்,

(ஆ) இந்த உடன்படிக்கையின் அல்லது பொருத்தத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடக்கத் தவறினல், அரசாங்கத்தால் அல்லது பயிற்சி அளிக்க முன்வந்த ஸ்தாபனத்தால் பொறுக்கப்பட்ட செலவுகளை அதாவது சம்பளம், படிகள், போக்குவரத்துச் செலவுகளும், இப்பயிற்சிக்கான தொடர்புடைய வேறு செலவுகளையும் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கட்டவேண்டியவராவர்.

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ; (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியர்களிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமையும், தொழில் நுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

**குறிப்பு.**—(1) சாதனங்களேயாயினும், சாதனங்களின் படிவங்களேயாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத்தின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பப் படிவங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் " செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை " என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையெதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 26 ந் உ.

1–103/10—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

இல. AB./118 X 2187/69

## திட்ட அமைப்பு, பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### பிரதி அதிபதி பதவிகள்

திட்ட அமைப்பு, பொருளாதார அலுவல்கள் அமைச்சின் திட்ட நடைமுறைப்படுத்தற் பகுதியில் பிரதி அதிபதி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் .. ..1970.1.31

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் .. 1970.2.5

குறிப்பு :

(1) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல்மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் பரீட்சாத்தியாக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள பரீட்சார்த்திகள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அப் பரீட்சார்த்திகள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள்; அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்** : இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச்சம்பளத்துக்குரிமையுடையவையுமாகும். விதவை, அநாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு உதவு தொகை வழங்கப்படும். நியமனம் மூன்றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும். அரசாங்கச் சேவையில் நிரந்தரமான, உபகாரச் சம்பளமுடைய நியமனத்தைப் பெற்றிருக்கும் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இப்பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி இந்நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்**

இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் வருமாறு :— ஆண்டொன்றுக்கு 13,800 ரூபாவிலிருந்து 600 ரூபா கொண்ட 4 வருட ஏற்றங்களால் ஆண்டொன்றுக்கு 16,200 ரூபாவரை செல்லும்.

4. **தேவையான தகைமைகள்**.— ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராயிருப்பதுடன் உடல் நலமுடையவராகவும் இருத்தல்.

(ஆ) 1970.1.31 அன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்.

(அரசாங்கத்தின் கீழ் நிரந்தரப் பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல், வர்த்தகவியல், கணிதம், புள்ளிவிவரவியல், புவியியல், சட்டவியல், சமூகவியல் அல்லது விவசாயப் பொருளியலில் முதலாவது அல்லது இரண்டாவது வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றவராக அல்லது மேற்கூறிய பாடங்களிலொன்றில் கலைமாணிப்பட்டத்துக்கு மேலான பட்டம் பெற்றவராகவும் ; திட்ட அமைப்பு, பொருளாதார அலுவல்கள் அமைப்புக்காக அல்லது இம்மாதிரியான தொடர்புடைய வேறு துறைக்காக வரையறுக்கப்பட்ட தொழிற் துறையில் குறைந்த பட்சம் 8 வருட பதவி வகித்தவராகவும் அல்லது அரசாங்கக் கணக்காளர் சேவையில் II ஆம் வகுப்பிலும் அதில் கூடிய வகுப்பிலும் இருத்தல் ;

**குறிப்பு :**

உயர் தொழிற் தகைமையுடையோருக்கும் போக்குவரத்து பொருளாதாரத் துறையில் அனுபவமுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் போது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு :** சமயதீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) வேலை அனுபவம் பற்றிய சான்றிதழ் (பந்தி 4 (இ) )

(ஈ) பண்புச் சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(உ) உயர் தொழிற் தகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(ஊ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் .

**குறிப்பு:**

(1) சாதனங்களாயினும், சாதனங்களின் படிகளாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தங்கள் விண்ணப்பம் அனுப்பிய தேதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக்கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காக நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தச் செய்திமடலின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

D. R. L. பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ, இல. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு —1. 1969.12.26.

1–103/11— 2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல். 14,887

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### கட்புல-செவிப்புல உதவியாளர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கட்புல—செவிப்புல உதவியாளர் பதவிகளுக்கு கீழே குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிரந்தரச் செயலாளர் (பொது நிருவாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். நியமதாரிகள் விதவைகள், அனாதைகள், உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் ;

(ii) அரசினர் சேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களைப் பொறுத்த வரையில், அரச கரும மொழிக் கொள்கைத் தேவைகளின் பொருட்டு தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும் ;

(iii) அரசினர் சேவையில் நிரந்தர பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார் ;

(iv) நியமதாரிகள், தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும் ;

(v) ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை ஒன்று மூலம் நடைபெறும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 3,864—18 × 144—6,456 ஆகும். (1.10.69 க்கு முன்னரான இதற்கொத்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 1,620—18 × 120—3,780 ஆகும்).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது),

(அ) கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் யாதேனும் இரண்டில் சித்தியுடனும் யாதேனும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடனும் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்,

அல்லது

(ஆ) கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் சித்தியுடனும் யாதேனும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடனும் மொழி (சிங்களம் அல்லது தமிழ்) உட்பட ஆறு பாடங்களில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணதர) ப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்,

(இ) மேற்போந்த (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவற்றிற்குச் சமனான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும் ;

(ii) பின்வரும் கட்புல—செவிப்புல உபகரணங்களை இயக்கும் தத்துவங்கள், அவற்றைப் பேணுதல், பழுதுபார்த்தல் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் :

35 மி. மீ. படமெறிகருவி,
வழுக்கிப் படமெறிகருவி,
மேலிருமை காட்டி,
பாட்டுத் தட்டியக்கி,
நாடாப் படியி,
16 மி. மீ. சலனப்பட, ஒலி எறிகருவி ;

(iii) சலனப்பட நூல்நிலைய வேலை பற்றிய சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும் ;

(iv) மேற்போந்த (ii) ஆம் (iii) ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள வேலையில் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(v) ஒளிப்படவியலில் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—கல்வி அமைச்சின் தலைமைக் கந்தோரிலும் பிரதேசக் கல்வித் திணைக்களங்களிலும் சலனப்பட இயக்குநராகவும் சலனப்பட உதவி இயக்குநராகவும் 10 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்துள்ளவர்களும் மேற்போந்த ii தொடக்கம் v வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுமான வேலையாளர்கள் மேற்போந்த (1) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிராவிடினும் சீர் தூக்கப்படுவார்கள்.

(vi) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும், வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(ஆ) ஆகக்கூடிய உயர்தொழில் தராதரப் பத்திரம் ;

(இ) கட்புல—செவிப்புல வேலையிலும் சலனப்பட நூல்நிலைய வேலையிலும் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ் :

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். எனினும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை அவர்கள் நேரே கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள/நிலையத் தலைவரால் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும் தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அதனை ஏற்குமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள் ; அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறின், உடனே கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு.
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 26 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

இவ்விண்ணப்பப் படிவம் 8½" × 13½" அளவுக் கடதாசியில் தயாரிக்கப்படவேண்டும்

**கட்புல—செவிப்புல உதவியாளர் பதவிகள்**

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று
   உள்ளபடி வயது : ————.
   பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரசையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ? : ————.
7. கல்வித் தகமைகள் : ————.
   (i) வருடம், பாடங்கள் உட்பட சி. பா. த./க. பொ. த.ப. பரீட்சை விபரங்கள் : ————.
   (திறமைச் சித்திகள், விசேட சித்திகள் இருப்பின் குறிப்பிடப்பட வேண்டும்.)
   (ii) கட்புல—செவிப்புல, சலனப்பட நூல் நிலைய வேலையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு சான்றான சான்றிதழ் பற்றிய விபரங்கள் : ————.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் : ————.
8. அறிவித்தலின் 5 ம் பந்தியின் (இ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.

12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்
(அ) படைக்கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :
(i) வகித்த பதவி : ————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

16. தற்போதைய உத்தியோகம் : ————.
(i) நிலையம் : ————.
(ii) பதவியும் தரமும் : ————.
(iii) சேர்ந்த திகதி : ————.
(iv) உபகாரச் சம்பள உரித்துடையவரா ? தற்காலிகமானதா ? சமயோகிதமா ? : ————.
(v) தற்போதைய அடிப்படைச் சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் : ————.
(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. ஏனைய விபரங்கள் : ————.

18. இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் உண்மையற்றவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**திணைக்கள/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனது எண். :
உங்கள் எண். : பொ. நி/30

க. க. அ. அ. செயலாளர்,
இவ்விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் விண்ணப்பங்கள் முடிவடையும் கடைசித் திகதிக்குப் பின்/முன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

..................ஆம் பந்திகளில் கொடுபட்டுள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்களுக்கமைய சரியானவை.* இத்துடன் அனுப்பப்படுகின்றது.

...................................
திணைக்கள/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

1–101—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## ஆயுள்வேதக் கல்லூரி

### தமிழில், நவீன மருத்துவ போதனைக்கான விரிவுரையாளர் (பகுதி நேர) பதவி

ஆயுள்வேதக் கல்லூரியில் நவீன மருத்துவத்தை பகுதி நேரமாக தமிழில் விரிவுரைகள் நடாத்தும் ஒரு விரிவுரையாளர் பதவி தேவைப்படுகின்றது.

**தகைமைகள்.**— விண்ணப்பதாரர் மேனாட்டுவைத்தியப்பட்டம் பெற்றவராகவும் தமிழில் விரிவுரை நிகழ்த்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**விரிவுரைகள்.**— தினம் இரு மணித்தியாலங்கள் வீதம் வாரத்திற்கு பத்து மணித்தியாலங்கள்

**பணஞ் செலுத்துதல்.**— முழுத்தொகையாக ரூபா 15/– ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் செலுத்தப்படும்.

2. முழுத் தகைமைகளையும்–அனுபவத்தையும் குறிப்பிட்டு மனுப் பத்திரத்தை 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் திகதியன்றோ அல்லது அதன் முன்போ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

பண்டிட் வில்யம் அல்விஸ்,
அதிபர்.

ஆயுள்வேதக் கல்லூரி
பண்டாரநாயக புர, ருஜகிரிய,
9.12.69.

1–97—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## ஆயுர்வேதத் திணைக்களம்

### ஆயுர்வேத வைத்தியப் பட்டதாரிகளுக்கு விசேட நிபுணத்துவப் பயிற்சி பெறுவதற்கு புலமைப் பரிசில்

விஷகடி, முறிவு விலகலுக்கும், வாதரோகங்களுக்கும் மாத்திரம் விசேட நிபுணத்துவப் பயிற்சி பெறும் பொருட்டு புலமைப்பரிசில் அளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத ஸ்தாபனங்களில் பட்டம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திட்டத்தைப் பிரபல்யம் செய்யும்பொருட்டு, அனுபவமும், தொழில நுட்பமும், சிகிச்சைமுறை முதலியனவும், இந்துறையில் புகழ் பெற்ற பரம்பரை வைத்தியராகவும் இருத்தல் வேண்டும்.

2. **தேவைகள் :**

(அ) இலங்கையிலோ அன்றி இந்தியாவிலோ அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்திய ஸ்தாபனங்களில் (சித்த, யுனானி அல்லது ஆயுர்வேத) பட்டம் பெற்றவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், உருது, அல்லது ஹிந்தி போன்ற மொழிகளில், ஒரு மொழியிலோ அல்லது மேற்பட்ட மொழிகளிலோ, மொழியறிவு இருப்பின் மேலதிக தகைமைகளாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

(இ) 70.1.20 ல் 35 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

3. எல்லா விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

4. மன உறுதியும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், பின்பு குறிப்பிடப்படும் திகதியில் இத்திணைக்களத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கோ அல்லது வேறு பரீட்சைக்கோ சமூகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர். இது சம்பந்தமாக உண்டாகும் பிரயாண அல்லது இதர செலவினங்களோ கொடுக்கப்படமாட்டாது.

6. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தாம் விரும்பித் தெரிவு செய்யப்பட்ட பாடத்தில் நிபுணத்துவப் பயிற்சி பெறுவதற்காக புகழ்பெற்ற விசேட வைத்தியர்களின் கீழ் பயிற்சி பெறவேண்டும்.

7. புலமைப் பரிசிலின் காலம் இருவருடங்களாகும். இக்காலத்தில் பயிற்சியாளர்கள் மாதமொன்றிற்கு எல்லாப் படிகளும் உட்பட ரூபா 100 பெற்றுக் கொள்வார்கள். இத்திணைக்களத்தில் கடமைபுரியும் ஊழியர்கள் புலமைப் பரிசிலில் தெரிவு செய்யப்பட்டால், அவர்களது முழுச் சம்பளத்துடனான பயிற்சி விடுமுறை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

8. இப்பயிற்சிக் காலத்தின்போது விண்ணப்பதாரர்கள், ஆயுள்வேதத் திணைக்களம் விதிக்கும் எல்லாச் சட்ட விதிமுறைகளுக்கும் சம்மதித்தல் வேண்டும்.

9. பயிற்சி முடிவடைந்தபின், ஒவ்வொரு பயிற்சியாளரும் தமது விசேட நிபுணத்துவப் பயிற்சி பெற்ற பாடத்தில் நீண்ட தொரு கட்டுரையைத் தயார்செய்து இப்பகுதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர். திருப்திகரமான முறையில் நிபுணத்துவப் பயிற்சியினை முடித்த பயிற்சியாளருக்கு அப்பாடத்தில் நிபுணத்துவம் பெற்றமைக்குச் சான்றாக இத்திணைக்களத்திலிருந்து ஒரு சான்றுப் பத்திரம் வழங்கப்படும். இச்சான்றுப் பத்திரம் உயர் கலைப் பயிற்சிப்பட்டத்திற்குச் சமனாக கணிக்கப்படமாட்டாது. ஆனால் இத்திணைக்களத்தினால் இப்பிரிவில் விசேட வைத்தியர்களைத் தெரிவு செய்யும் பொழுது இவர்களுக்குத் தனிச்சலுகை வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின் போது திருப்திகரமான முன்னேற்றம் காணப்படாத பயிற்சியாளர்களின் புலமைப் பரிசில் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பங்கள், விளம்பரத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தினைப் போல் தயார் செய்து, ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம் கொழும்பு 8, என விலாசமிடப்பட்டு 1970.1.20 ஆண்டு அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் படியாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல்மூலையில் "ஆயுர்வேத வைத்தியப் பட்டதாரிகளுக்கு விசேட நிபுணத்துவப் பயிற்சி பெறுவதற்கு புலமைப் பரிசில்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

ஆயுர்வேதத் திணைக்களம்,
கொழும்பு 8,
1969 ம் ஆம் டிசம்பர் மீ 19 ந உ.

விமல் நவகமுவ,
ஆயுர்வேத ஆணையாளர்.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**ஆயுர்வேதத் திணைக்களம்**

**ஆயுர்வேத வைத்தியப் பட்டதாரிகளுக்கு விசேட நிபுணத்துவப் பயிற்சி பெறுவதற்கு புலமைப் பரிசில்**

1. முழுப் பெயர் : ————.
(பெரிய எழுத்துக்களில்).
(அ) குடும்பப் பெயர் : ————.
(ஆ) வேறு பெயர்கள் : ————.
2. பிரத்தியோக விலாசம் : ————.
3. சாதியம் : ————.
4. பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
70.1.20 ல் சரியான வயது.
வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் :————
5. கல்வித் தகைமைகள் : (சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).
(1) சிங்களம் : ————.
(2) தமிழ் : ————.
(3) ஆங்கிலம் : ————.
(4) சமஸ் கிருதம் அல்லது வேறுமொழிகள் :————.
6. தொழிற் தகைமைகள் : ————.
(சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
7. தற்போதைய தொழில் : ————.
8. வைத்தியத் தொழிலின் அனுபவம் : ————.
9. விண்ணப்பதாரி நிபுணத்துவப் பயிற்சி பெறவிரும்பும் விசேடதன்மை (ஏற்றுக் கொள்ளும் பயிற்சியின் முறைபற்றி விபரமாகத்தருக) : ————.
10. எந்தத் தொழில் நுட்ப நிபுணரிடம் பயிற்சி பெறவிருப்புகிறீர் அவர் பதிவு செய்யப்படிருந்தால் பதிவு எண்ணும் விலாசமும்:——
(அந்நிபுணரிடமிருந்து சம்மதக் கடிதம் இணைக்கப்படின் மிக நன்று. அவ்வைத்தியருக்கும் பயிற்சிக் காலத்தின் போது ரூபா 100 யிற்சி அளிப்பதற்காக வழங்கப்படும்.)
11. இதர விடயங்கள் : ————.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். அவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் புலமைப் பரிசிலினை ரத்துச்செய்வதற்கும், நான்பாத்திரசாவேன் என அறிவேன்.

————,
திகதி : ————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

1–99—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் மனையியல் (சிங்கள, தமிழ் மொழி மூலம்) விரிவுரையாளர் பதவிகள்**

மேற்கூறிய பதவிகள் சம்பந்தமாக அரசாங்க வர்த்தமானியில் 28.11.69 இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து, விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.1.70 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1–1—2.1.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,887 [மிகுதி விளம்பரங்கட்கு 22 ஆம் பக்கம் பார்க்கவும்]

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**வவுனியா உபபிரிவு**

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் வவுனியா, வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு தை மாதம் 24 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 72,000 ரூபாவுக்கும், அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையராகிய ஒப்பந்தகாரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | செலுத்த வேண்டிய கேள்விக் கட்டணத் தொகை ரூபா |
|---|---|
| கல்லாறு அணைக்கட்டுத் திட்டம்—வாய்க்கால் திருத்த வேலை .. .. .. | 100 |

இக்கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் கீழ்க்காணும் அலுவலகங்களில் 1970 ம் ஆண்டு தைமாதம் 20 ம் திகதி பி. ப. 3 மணி வரையும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் :—

(1) நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், உபபிரிவு, வவுனியா
(2) நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், வவுனிக்குளம், மாங்குளம்.
(3) நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், கிளிநொச்சி.
(4) நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், ஒட்டு சுட்டான்.
(5) நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், முருங்கன்.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பகாரர்கள் இப்போது அரசாங்கத்தின் கீழ் ஒப்பந்த வேலைகள் செய்வாராயின் அவர்கள் அந்தந்த உத்தியோகத்தரிடமிருந்து திருப்திகரமான வேலை செய்ததற்காகிய அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் மேற் கூறப்பட்ட நீர்ப்பாசன அலுவலகங்கள் ஏதாவதொன்றில் மேற்கூறிய கேள்விக் கட்டணத் தொகை செலுத்தப்படவேண்டும். அல்லது இக்கட்டணம் ஏதாவதொரு கச்சேரியில் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுக்காட்டப்பட்டாலும் போதுமானது; இக்கேள்விக் கட்டணம், நீர்ப்பாசன இலாகா அதிபரின் பெயரில் செலுத்தப்படவேண்டும்.

இவ்வேலைக்கு எந்தவித பொருட்களோ, ஆயுதங்களோ அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டா.

இக்கேள்வி பற்றிய மேலதிக விபரங்களை வவுனியா உப–பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சா. ஒ. அ. சோமநாதர்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
வவுனியா உப–பிரிவு.

வவுனியா,
1969 ம் ஆம் மார்கழி மீ 21 ந உ.

1–102—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

3½" 14" எண்ணெய் பூசப்பட்ட தும்பு வடங்களை வழங்குவதற்கான கேள்விகளைக் கோரும், 5.12.69 ஆந் திகதிய 14,883 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமாகிய 12–139 ஆம் இலக்க அறிவித்தலைப் பார்வையிடுக. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கானகடைசி நேரம் 12.2.1970 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை இத்தால் பிற்போடப்பட்டுள்ளது. கேள்விச் சாதனங்கள் 10.2.1970 நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு சனவரி மீ 2 ந் உ.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

1–22—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,887

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பதுளை உப பிரிவு

பதுளை உப பிரிவுக்குச் சேர்ந்த பண்டாரவளை கஹடவளையிலுள்ள பிரமச்சாரிகள் கட்டிடத்தின் மிகுதி வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பண்டாரவளையிலுள்ள ஊவா பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 35,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள்), கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இச்கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் பதுளை, மஹியங்கனை, மொனராகலை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு சனவரி மாதம் 20 ம் திகதி செவ்வாய்க்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50 ரூபாய் கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

இக்கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்களை பதுளை உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
பதுளை,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 22 ந் உ.

வி. நாகேந்திரன்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பதுளை உப பிரிவு.

1–10—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

எல்டபிள்யூ 2/49

## புத்தளம் கச்சேரி

அரசாங்கத்தில் ரூபா 15,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவுசெய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கீழ்க்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள், 1970ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை புத்தளம் கச்சேரிக் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நாத்தாண்டியாவிலுள்ள தப்போவ அக்கர அசுவ றோட்டைத் திருத்துதல்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட ஒவ்வொரு வேலைகட்கும் தனித்தனியாக இவ்விரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 25 வைப்புப்பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக்காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத்தபால் மூலம், தலைவர், கேள்விச்சபை, கச்சேரி, புத்தளம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கச்சேரி, புத்தளம்,
1969ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ந் திகதி.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

11–113—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

## கமத்தொழிற் சேவைத் திணைக்களம்

### 1970 ம் ஆண்டில் பூநகரி நெற்களஞ்சியம்/உரப் பண்டகசாலை ஆகிய இடங்களில் ஏற்றி இறக்கும் சேவைகளுக்குக் கூறுவிலைகள்

28.11.69 ம் திகதிய அரசாங்க வர்த்தமானி இலக்கம் 14,882 ல் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய சேவைகளுக்கான கூறுவிலைகள் 1970ம் ஆண்டு 16 ம் திகதி ஜனவரி மாதம் நண்பகல் 12.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

சேவைகள் சம்பந்தமான பட்டியலையும் கூறுவிலைகளுக்கான விண்ணப்பப் பத்திரங்களையும் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ம் திகதி முற்பகல் 11.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கமத்தொழிற் சேவைத் திணைக்களம்,
அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம், 22.12.1969.

க. சபாரத்தினம்,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்.

1–25—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,887

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள், மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

முள்ளிக்குளம் குடியேற்றத் திட்டத்துக்கு பிரவேசப் பாதை அமைத்தல்

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு தை மாதம் 28 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் " அரசாங்க அதிபர், மன்னார் " என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி (29.1.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் " முள்ளிக்குளத்துக்குப் பாதை அமைத்தல் " என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி (29.1.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

கச்சேரி, மன்னார்,
1969 ம் ஆண்டு மார்கழி மீ 20 ந் உ.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

1–31—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

## கச்சேரி—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1970 ம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பீ. ஒ. பீ. பாதை பெரியபண்டிவிரிச்சானில் அமைத்தல்

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ம் ஆண்டு தை மாதம் 28 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்டவேண்டியதில்லை.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1970 ஆம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி (29.1.70) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "பீ. ஒ. பீ. பாதை, பெரிய பண்டிவிரிச்சான்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக் கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியில் 1970 ஆம் ஆண்டு தை மாதம் 29 ம் திகதி (29.1.70) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக் காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாதகாலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

நா. வேதாரணியசேயோன்,
உதவி அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1969 ம் ஆண்டு மார்கழி மீ 20 ந உ.

1—32—2.1.70 ந் திகதிய வர்தமானி இல. 14,887

---

## தகவற் பகுதி

### பழுதடைந்த வாகனங்களுக்குக் கேள்விப் பத்திரம்

கீழ்க்காணும் பழுதடைந்த வாகனங்களை விற்பனை செய்தற்கான கேள்விப் பத்திரங்களை 1970 ஜனவரி 26 ந் திகதி முற்பகல் 11.00 மணிவரையில், தகவல் அதிபதி ஏற்றுக்கொள்வார்.

(1) வொக்ஸ்வாகன் வான் இல. 2 ஸ்ரீ 6089.
(2) வொக்ஸ்வாகன் வான் இல. 3 ஸ்ரீ 204.
(3) விலிஸ் ஜீப் இல. 4 ஸ்ரீ 2437.
(4) வொக்ஸ்வாகன் வான் இல. 3 ஸ்ரீ 9427.
(5) ஒஸ்டின் லொறி இல. சீவீ 632.

2. மேற்குறிப்பிட்ட முதல் மூன்று வாகனங்களும் கிரில்லப்பனையிலுள்ள அரசாங்கத் திரைப்படப் பிரிவில் இருக்கின்றன. 4 வது வாகனம் கொழும்பு 7, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலுள்ளது. 5 வது வாகனம் மொறட்டுவை, வெலோனாவிலுள்ள அரசாங்கத் திரைப்படப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.

3. எல்லாக் கேள்விப் பத்திரங்களும் 1970 ஜனவரி 26 ந் திகதி முற்பகல் 10 மணி வரையில், தகவற் பகுதியில் கிடைக்கப்பெறும் மாதிரிப் படிவங்களின் இரு பிரதிகளை நிரப்பி அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரம் வழங்குதற்கு முன்பு, கொழும்பு, கோட்டை சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை 7 ம் இலக்கத்திலுள்ள தகவற் பகுதியில் 500 ரூபாய் கட்டுக்காசு கட்டி அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. எல்லா கேள்விப் பத்திரங்களும் உறையிலடைக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்டு அதன் இடது மேல் மூலையில் "...... ம் இலக்க வாகனத்திற்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு, தகவல் அதிபதி, இல. 7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கோட்டை, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். பிந்திவரும் கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. கேள்விப் பத்திரங்கள் 1970 ஜனவரி 26 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, கோட்டை, சேர் பாரன் ஜயத்திலக்க மாவத்தை 7 ம் இலக்கத்திலுள்ள தகவல் பகுதியில் வைத்துத் திறக்கப்படும். விரும்பினால், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்திலும் கையளிக்கலாம்.

6. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்பு, மேற்கூறிய 2 ம் பந்தியில் குறிப்பிட்ட இடங்களில் வாகனங்களைப் பரிசோதித்துக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களில் எவ்வித மாற்றங்களோ அல்லது அழித்தலோ செய்ய வேண்டியதேற்பட்டால் அவைகள் கைச்சாத்திட்டுத் திருத்தப்பட்டவேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தனது கேள்வியை ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்பட்ட 7 தினங்களுள், தான் கோரிய விலையின் முழுத்தொகையையும் செலுத்தி அங்ஙனம் செலுத்திய 10 தினங்களுக்குள் வாகனத்தை அப்புறப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அங்ஙனம் நடந்துகொள்ளத் தவறினால் அன்னவரின் கட்டுக்காசு அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படுவதுடன் ஒழுங்கீனமான உடன்படிக்கையாளர் பட்டியலில் தனது பெயர் இடம் பெறும். மேலும் எதுவித அரசாங்க ஒப்பந்தங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

8. எந்தவொரு கேள்விப் பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்கவும், அல்லது கேள்விப்பத்திரத்தின் எப்பிரிவையும் ஏற்றுக்கொள்ளவும், தகவல் அதிபதிக்கு பூரண அதிகாரமுண்டு. அவரின் தீர்ப்பே முடிவானதாகும்.

9. வாகனங்களைத் திருத்தவோ அல்லது அவற்றின் குறைநிறைகளுக்கோ இத்திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது. வாகனங்கள் தற்போது இருக்கும் நிலையிலேயே விற்கப்படும்.

10. வாகனங்களைப் பதிவு செய்வதன் தொடர்பான சகல செலவுகளையும் கொள்முதல் செய்யும் கேள்விக்காரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தகவல் அதிபதி.

தகவல் பகுதி,
இல. 7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கோட்டை, கொழும்பு 1,
1969 டிசம்பர் 27 ந் திகதி.

1–2—2.1.70 ந் திகதி வர்த்தமானி இல. 14,887

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பயன்படுத்தத்தகாத வாகனம் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம்

கொழும்பு 6, கிருலப்பனையிலுள்ள, காணி அபிவிருத்தித் திணைக்கள வேலைத்தலத்தில் இருக்கும் பயன்படுத்தத் தகாத வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

(1) ஐசீ. 1898 (ஒஸ்ரீன் பீ. 6 பவுஸல் லொறி தாங்கி தவிர்த்து முழு இயந்திரத்துடன்)

2. 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ந் திகதி நண்பகல் 12 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இணைப்படியில் கேள்விப்பத்திரங்கள் இருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 150 கட்டுப்பணமாகக் கொழும்பிலுள்ள காணி அபிவிருத்தி அலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கைவங்கி (யோர்க்வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலாயின் ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி அது சம்பந்தமான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. எல்லாக் கேள்வுகளும் 6 மாதங்களுக்கே செல்லுபடியாகும்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் “ பயன்படுத்தத்தகாத வாகனங்கள் கொள்வளவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் ” எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அக்கிராசனர், கேள்விச் சபை, காணி அபிவிருத்தித் திணைக்களம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு, அனுப்ப வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ்மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுக் தபாலிலும் அல்லது கேள்விக்காரரின் முகவர் மூலம் நேரடியாகவும் காணி அபிவிருத்தித் திணைக்களப் பிரதான கணக்காளரிடமும் கையளிக்கலாம். அப்போது ஒரு ஒப்புக்கோடற்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் விரும்பின் சமூகமளிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கு முன்னதாகக் கிருலப்பனையிலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்கள வேலைத்தலத்தில் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேள்விக்காரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கேள்விகளினுள்ள எதாவது மாற்றங்கள் அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரால் முதலெழுத்தொப்பமிடப்பட்ட வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொண்டது சம்பந்தமான விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குள் இது தொடர்பான பணம் (அத்தாவது கேள்விக்காரர் கேட்டுக் கொண்ட தொகை) முழுவதையும் தேர்வு பெற்ற கேள்விக்காரர் செலுத்த வேண்டும். அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட 14 நாட்களுக்குள் வாகனங்களை அப்புறப்படுத்த வேண்டும். தேர்வுபெற்ற கேள்விக்காரர் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் தாங்களே செய்துகொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் வாகனங்களை அகற்றத் தவறின் அவைகள் திரும்பவும் விற்கப்படும். அல்லது விற்பதற்கு வேறு நடவடிக்கை எடுக்கப்படும். அப்பொழுது திருப்திகரமான காரணங்களைக் காணி அபிவிருத்தி அதிபருக்குக் காட்டினாலன்றி அவ்வாகனத்தைத் தேர்வு பெற்ற கேள்விக்காரர் கோரமுடியாது. தேர்வு பெற்ற கேள்விக்காரர் தவறு இழைப்பின் அவருடைய கேள்விப்பத்திர வைப்புப் பணம் முடிக்குரிமையாக்குவதற்காகப் பறிக்கப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கேள்விக்காரர்கள் ஒன்றுக்கோ அல்லது எல்லா வாகனங்களுக்காகவுமோ கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

9. கேள்விப்பத்திரப்படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தக் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன், சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந் உ.

1-120—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## காலிக் கச்சேரி

காலி மாவட்டத்தில் எனது நிருவாகத்தின் கீழுள்ள அரசாங்கக் கட்டிடங்களைப் பரிபாலிப்பதற்கும் திருத்தியமைப்பதற்குமான கேள்விப் பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் இணைப் பிரதிகளாக எனக்குச் சமர்ப்பிப்பதுடன் அதற்குத் தேவையாகும் பத்திரங்களை—

(அ) தமது பதிவு சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும்

(ஆ) திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடிய ரூபா 10 ஐ காலிக் கச்சேரியில் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டையும்.

சமர்ப்பித்து காலி மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து 1970 ஆம் வருடம் ஜனவரி மாதம் 28 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

3. எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (சீல்) வைத்து பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பலாம். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ கேள்விப் பத்திரம்–அரசாங்கக் கட்டிடங்கள் ” எனத் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். தபாலில் அனுப்புவோர் பதிவுத் தபால் மூலமும் நேரில் கொண்டு வருவோர் காலிக் கச்சேரிக் காரியாலய உதவியாளரின் அறையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலும் இடுதல் வேண்டும். எக்காணத்தைக்கொண்டும் குறித்த நாளில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்குப் பிந்திக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. 1970 ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு காலிக் கச்சேரியில் வைத்துக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வமயம் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் அங்கு சமூகமாயிருக்கலாம்.

5. கட்டிட ஒப்பந்தமான ரூபா 5,000 த்துக்குக் குறையாத ஒரு தொகைக்கு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்றுள்ள கிராமாபிவிருத்திச் சங்கம், பதிவுபெற்றுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் தொழிற் சங்கம் ஆதியனவும் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் இதற்குக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

6. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை காலிக் கச்சேரிக் காரியாலய உதவியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஏ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

கச்சேரி, காலி,
1969.11.27.

1-104—2.1.70 ந் திகதி வர்த்தமானி இல. 14,887

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பாவித்த பொருள் ஏல விற்பனை

கீழே கொடுக்கப்பட்ட பாவித்த பொருட்களும் மற்றும் பாவித்த உடைகளும் களுத்துறை பொலிஸ் அதிகாரியின் காரியாலய வளவில் 1970 ம் வருடம் ஜனவரி மாதம் 26 ம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்களின் விபரம்

| | |
|---|---|
| கைப்பட்டி | 9 |
| பொலிஸ் சாரதி தொப்பி | 3 |
| குண்டாந்தடி | 3 |
| பிறஸ் | 15 |
| தோல்பட்டி (பெல்ட்) | 16 |
| தோட்டா உறை | 15 |
| பூட்ஸ் சாப்பாத்து ஜோடி | 30 |
| பாதுகாப்புத் தொப்பி | 1 |
| காப்தொப்பி | 1 |
| கன்வஸ் சப்பாத்து சோடி | 3 |
| கம்பளி (காப்பெட்) | 12 |
| நெடுங் கால்சட்டைகள் (காக்கி) | 4 |
| புஸ்கோர்ட் காக்கி | 6 |
| கோர்ட் காக்கி | 14 |
| கட்டைக்களிசான் காக்கி | 19 |
| சட்டை (காக்கி) | 1 |
| குழங்கால் பட்டி | 23 |
| மழை அங்கி | 18 |
| மழை அங்கி பட்டி | 2 |
| பொலிஸ் தொப்பி | 46 |
| தோல் சப்பாத்து (கறுப்பு) சோடி | 128 |
| கால்மேஸ் (கறுப்பு) (சோடி) | 5 |
| கால்மேஸ் (காக்கி) (சோடி) | 3 |
| தொப்பி (காக்கி) | 2 |
| கையுள்ள நாற்காலி | 5 |
| தாற்காலி | 4 |
| காட் இன்டெக்ஸ் | 1 |

| பொருட்களின் விபரம் | |
|---|---|
| புஸ்தகங்கள் வைக்கும் பெட்டி | 1 |
| பத்திரங்கள் வைக்கும் பெட்டி | 1 |
| அலுவலகத் தட்டம் | 6 |
| கடுதாசி இருக்கை | 3 |
| முக்காலி (மரம்) | 2 |
| மெத்தை (தும்பு) | 12 |
| ஆமைப்பூட்டு | 3 |
| உடுப்பு இருக்கை | 6 |
| கொசுகு வலை | 3 |
| ஜாடி | 3 |
| 1 கலன் தகரம் | 25 |

| பொருட்களின் விபரம் | |
|---|---|
| 4 கலன் தகரம் | 11 |
| துவிச்சக்கரவண்டி | 5 |
| எண்ணை லாம்பு (துவிச்சக்கரவண்டி) | 1 |

பொலிஸ் அதிகாரி,
மேற்கு மாகாணம் (தெற்கு),

பொலிஸ் காரியாலயம்,
களுத்துறை,
20.12.69.

1–98—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

## பொலிஸ் இலாகா

### பிரசித்த ஏலவிற்பனவு

பாவித்த பொருட்களும் பொலிஸ் உடைகளும் 26.1.70 ல் காலை 9.30 தொடங்கி பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்கூறிய பொருட்கள் பார்வை இடவேண்டின் கந்தோர் நேரத்தில் கம்பஹா பொலிஸ் பண்டகசாலையில் பார்வை இடலாம். பொருட்களை, வேண்டியவர் உடன் காசைக் கட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

பொலிஸ் அதிகாரி,
மேற்கு மாகாணம் (வடக்கு).

பொலிஸ் கந்தோர்,
கம்பஹா
20.12.69.

### ஒக்சன் போடும் சாமான்களின் விபரம்

| | | |
|---|---|---|
| (1) | சயிக்கிள் | 42 |
| (2) | வெறும் கலன் ரின் | 77 |
| (3) | வெறும் 4 கலன் ரின் | 32 |
| (4) | ஆம்ருக் | 1 |
| (5) | மெத்தை | 24 |
| (6) | வில்சற் | 1 |
| (7) | ரைப் றயிற்றர் | 2 |
| (8) | தோல் பெல்ற் | 24 |
| (9) | போல் பாக் | 17 |
| (10) | மழை கோட் | 20 |
| (11) | ஙிற்றக் | 52 |
| (12) | காக்கி ரியூனிக் | 133 |
| (13) | காக்கி புஸ்கோட் | 17 |
| (14) | காக்கி சோட்ஸ் | 67 |
| (15) | இன்ஸ்பெக்ரேஸ் கால் சட்டை நீட்டு | 15 |
| (16) | இன்ஸ்பெக்ரேஸ் புஸ்கோட் | 18 |
| (17) | இன்ஸ்பெக்ரேஸ் ரியூனிக் | 3 |

### ஒக்சன் போடும் சாமான்களின் விபரம்

| | | |
|---|---|---|
| (18) | இன்ஸ்பெக்ரேஸ் வெள்ளை ரியூனிக் | 1 |
| (19) | இன்ஸ்பெக்ரேஸ் வெள்ளை கால்சட்டை | 1 |
| (20) | இன்ஸ்பெக்ரேஸ் பீக்கேஸ் | 4 |
| (21) | இன்ஸ்பெக்ரேஸ் பெல்ற் | 4 |
| (22) | பொலிஸ் தொப்பி | 110 |
| (23) | பொலிஸ் சப்பாத்து | 214 |
| (24) | பொலிஸ் பூட்ஸ் | 48 |
| (25) | கன்வஸ் சப்பாத்து | 10 |
| (26) | இஸ் ரொக்கிஸ் ஸ்பெயற் | 37 |
| (27) | பட்டீஸ் பெயர் | 60 |
| (28) | பேறற்ஸ் | 7 |
| (29) | பெரிய நுளம்புவலை | 2 |
| (30) | சின்ன நுளம்பு வலை | 8 |
| (31) | றேடியோ செற் | 1 |
| (32) | மைக்கூடு | 6 |
| (33) | காக்கி தொப்பி | 14 |
| (34) | அளவு நாடா | 1 |
| (35) | பிறஸ் | 28 |
| (36) | கிற்பொக்ஸ் யூனிபோம் பெட்டி | 2 |
| (37) | ஆமைப்பூட்டு | 19 |
| (38) | மழை கோட் இஸ்ருப் | 11 |
| (39) | காக்கி பெல்ற் | 7 |
| (40) | கிருஸ் கில்மெற் | 1 |
| (41) | மழை கோட் பக்கிஸ்ஸ் | 3 |
| (42) | கோல்ஸ்ரேஸ் | 3 |
| (43) | பௌஸ்செஸ் | 3 |

பொலிஸ் அதிகாரி.

3.12.69.

I-123—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## ஆயத் துறைகள் விற்பனவு—திருகோணமலை மாவட்டம்

கீழ்க் காணும் ஆயத்துறைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் திருகோணமலை அரசாங்க அதிபரால் பொது மக்களிடமிருந்து கோரப்படுகின்றன. இவைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 26.1.70 காலை 10.00 மணிவரை திருகோணமலை கச்சேரியில் ஏற்றுகொள்ளப்படும். இக் கேள்விப் பத்திர உரிமை 1970 ம் ஆண்டு பெப்ரவரி முதலாம் தேதியிலிருந்து ஒரு வருட கால வரையறை உடையதாகும்.

1. கங்கை
2. மூதூர்
3. கிளிவெட்டி.
4. உப்பாறு
5. சலப்பையாறு.
6. கட்டைப்பறிச்சான்.
7. புடவைக்கட்டு.
8. யான் ஓயா.
9. இடிமாந்துறை.

இவ்விற்பனவுக்கான விண்ணப்பப்படிவங்கள் திருகோணமலைக் கச்சேரியில் 25.1.70 ந் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். ரூபா 100 கட்டிய பற்றுச்சீட்டையும் இவ்விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும்போது சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். காலை பத்து மணிக்கு கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் திறக்கப்பட்டு கவனிக்கப்படும். அந் நேரம் விரும்பினால் விண்ணப்பதாரர்களும் சமூகம் தரலாம். பதிவுத்தபால் மூலம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பாதவர்கள் தங்களின் கேள்விப்பத்திரங்களைக் கச்சேரியில் நேரில் கையளிக்கலாம். அப்படிக்கையளிக்கும் போது விண்ணப்பம் அடங்கியுள்ள தபால் உறையின் மீது எத்துறைக்காக கேள்வி விளம்பரம் கோரப்படுகின்றதோ அதன் பெயரையும் விண்ணப்பதாரரின் பெயர், விலாசம் ஆகியவற்றையும் பூரணமாக அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தவேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் கேட்ட தொகையின் மூன்றில் ஒன்றைப் பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த மூன்று நாட்களுக்கிடையில் அனுமதிக்கப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தத் தவறினால் அவருடைய விண்ணப்பத்தை இழக்க நேரிடும்.

4. இவ்விற்பனவுக்குரிய நிபந்தனைகளைத் திருமலைக் கச்சேரியில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிடலாம். (போயாவிற்கு முதன் நாட்களில் காலை 9.00—1.00 மணி வரை).

எவ்விதக் கேள்வியுமின்றி கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமையை திருகோணமலை அரசாங்க அதிபர் பெற்றுள்ளார்.

எஸ். சிவஞானம்,
உதவி அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்ட அதிபருக்காக.

கச்சேரி,
திருகோணமலை, 22.12.69.

1–24—2.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,887

# பதவிகள்—வெற்றிடம்

17 ம் பக்கத் தொடர்

## குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்

### மின் முகாரிப் பதவி—தரம் III

குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தினுல் III ம் தர மின் முகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு, குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர், த. பெ. 535, லோற்றஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 18.1.1970 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**2. சம்பள அளவுத்திட்டம்**

ஆண்டுக்கு ரூபா 1,860 ஆகத் தொடங்கி 6 ஆண்டு ஏற்றங்களாக, ஆண்டுக்கு ரூபா 120 ஆக அதிகரித்து ரூபா 2,580 வரை செல்லும். (திரட்டி வேதன அளவுத்திட்டம் ரூ. 4,152—6 × 144—5,016.)

**3. வயதெல்லை**

18.1.1970 திகதியன்று 24 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

**4. அபேட்சகரிடமிருந்து வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்**

(i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதத்திலும் பௌதிகத்திலும் சித்தியெய்தியவராகவிருத்தல் வேண்டும்,

அல்லது

பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களிலும் பிற மூன்று பாடங்களிலும் பரீட்சைக்கு இரு தடவைகளுக்கு மேல் தோற்றுமல் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ii) இலண்டன் சிற்றி அன்ட கில்ட்ஸ் நிறுவகத்தின் பின்வரும் சான்றிதழ்களை அல்லது அவற்றிற்குச் சமமான மின் அல்லது இயந்திர எந்திரிகள் நிறுவகத்தினுல் வழங்கப்படும் பின்வரும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) மின் எந்திரவியற் பயிற்சி ஏசி/டிசி தொடக்கப் பயிற்சி.

(ஆ) மின் எந்திரவியற் பயிற்சி ஏசி/டிசி இடைப் பயிற்சி.

(iii) நன்கு மதிக்கப்பட்ட தொழிற்சாலையில் 175 கிலோவாற் வரை கொண்டதும் அதை உள்ளடக்கியதுமான மின் வழங்கும் அலகுகளைக் கையாளுதலில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**5. சேவை நிபந்தனைகள்**

பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்குரியதுமாகும். விதவை அநாதை உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகை வழங்க வேண்டும்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலமல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(ஈ) அனுபவத்தை நிரூபிப்பதற்கான நற்சான்றிதழ்கள்.

(உ) இரு குணச் சான்றிதழ்கள்.

7. இந்தச் செய்தி மடலில் பகுதி I தொகுதி II ன் ஆரம்பத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமாக வேறு கடிதத் தொடர்புகளையும் குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

டபிள்யூ. எல். பி. டி மெல்,
குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர்.

குடிசார் விமானப் பொக்குவரத்துத் திணைக்களம்,
த. பெ. 535, லோற்றஸ் வீதி,
கொழும்பு 1, 1969 யூலை 15 ந் திகதி.

### விண்ணப்பப் படிவம்

**மின் முகாரிப் பதவி—தரம் III**

1. முழுப் பெயர் :————.
(தடித்த எழுத்துக்களில்)
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த திகதியும் வயதும் :————.
4. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாருயின்—
   1. பரம்பரையாகவா ? :————.
   2. பதிவு மூலமா ? :————.
5. சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை :————.
(சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிடவும்)
6. சித்தியெய்திய தொழிநுட்பப் பரீட்சை :————.
7. அனுபவம் :————.
8. விசேட தகைமைகள், உரிமைக் கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைக் குறிப்பிடவும் :————.
9. தற்போதைய/முன்னைய தொழிலின் விபரத்தைக் குறிப்பிடவும் :—

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் நான் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் அளிக்கப்பட்ட பின் காணப்படின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

1–110—2.1.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,887

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968** தொடங்கி அமுலுக்கு வந்தது

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின்கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ராறல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. | 46 00 | 60 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. | 36 00 | 42 00 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | தபாற்செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 00 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி .. | 5.2.70 | வியாழன் .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மார்ச்சு .. .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

**எல் டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.